மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 06 ம் நாள் வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.03/2024
இன்
இடைநிலை மனு எண்.02/2024
இன்
அசல் வழக்கு எண்.22/2021
-------

1. முத்துப்பாண்டி
2. குருபஞ்சாகேசவன் .. மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. வெ. பெருமாள்சாமி
2. சு. பொன்னுவேலுச்சாமி .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 19.01.2026 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. பாஸ்கரன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. அருணாசலம், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை, மனு, அபிடவிட்டு மற்றும் எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது கடந்த 04.03.2024 ம் தேதி தாவா இ.ம.எண்.02/2024 ல் மனுதாரர்கள்/வாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டி கட்டளை 9 விதி 7 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்</u>**–

**2.1.** மனுவில் 2 ம் மனுதாரர். அசல் வழக்கில் 2 ம் வாதி. தபசில் 3 வது இலக்கச் சொத்தினை மனுதாரர்கள் பாதையாக பயன்படுத்தி அமைதியாகவும்

தொடர்ந்தும் அனுபவித்து வருவதனை பிரதிவாதிகள் எவ்வித இடையூறுகளும் செய்யக்கூடாதென ஒரு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் பிறப்பிக்க வேண்டி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா வழக்கானது கடந்த 04.03.2024ம் தேதியன்று இ.ம.எண்.02/2024ல் தனது தரப்பு எதிருரை தாக்கல் செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்த விவரத்தை மனுதாரரது வழக்கறிஞர் தனக்கு முன்கூட்டியே தெரியப்படுத்தியிருந்தார். அன்றைய தினம் மனுதாரரின் வேலை நிமித்தம் காரணமாக வெளியூருக்கு சிகிச்சைக்கு சென்றிருந்ததால் மனுதாரரால் அவரது வழக்கறிஞரை சந்தித்து விபரம் கூற இயலவில்லை. எனவே தாவா அசல் மனுவில் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஷை வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும். தாவா வழக்கில் மனுதாரர் தரப்பிற்கு நல்ல கட்சி உள்ளது. எனவே மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாது போனால் மனுதாரர் தரப்பிற்கு ஏராளமான கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுவதாக உள்ளது. எனவே மனு தாக்கல்.

3. <u>1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்–</u>

**3.1.** மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் வழக்கு இரண்டுமே வீணானதாகும். மனுதாரருக்கு 1, 2 மற்றும் 3வது இலக்கச் சொத்துக்களில் உரிமையும், பாத்தியமும் இருப்பதுபோல் கற்பனையாக வழக்குத் தாக்கல் செய்திருப்பது நீதிமன்றத்தை ஏமாற்றும் வேலையாகும். மனுதாரர்கள் தாவா சொத்தை பாதையாக அனுபவித்தார்கள் என்பது முற்றிலும் உண்மையில்லை. தாவா சொத்தைப் பொறுத்து 2ம் மனுதாரரும் அவருடைய தகப்பனார் ஜெயகுருநாதனும் பல மோசடி பத்திரங்களை உற்பத்தி செய்துள்ளார்கள். மேற்படி பத்திரங்கள் அனைத்தும் செல்லக்கூடியதில்லை என்று பரிகாரங்கள் கோரி இந்நிர் எதிர்மனுதாரர்

எதிர்கோருரிமை தாக்கல் செய்துள்ளார். உரிமையில்லாத சொத்துக்கள் தொடர்பாக மோசடி ஆவணங்கள் உற்பத்தி செய்துவிட்டு அதை மறைப்பதற்கு பாதை, பாத்தியம் என்று வழக்கு தாக்கல் செய்திருப்பது முன்னுக்குப் பின் முரணானதாகும்.

3.2. தாவா சொத்தில் மனுதாரர்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும், மனுதாரர்கள் பெற்ற கிரையம் அனைத்தும் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்று சாத்தூர் வட்டாட்சியர், சிவகாசி சார் ஆட்சியர் மற்றும் விருதுநகர் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். மேற்படி உத்தரவுகள் இந்நிர் எதிர்மனுதாரர் தனது எதிர்கோருரிமையுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இறுதியாக மனுதாரர்களுக்கு எந்த உரிமையும், தாவா சொத்தில் இல்லை என்று மாண்பமை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் மனுதாரர் செய்த சீராய்வு மனுவில் கூறப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் மனுதாரர்கள் இந்நிர் வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பது சட்டத்திற்கு புறம்பானதாகும்.

3.3. மனுதாரர் வழக்கை நடத்தாமல் வீண் காலம் கடத்துவதற்காகவே ஒருதலைபட்சமாக விட்டுவிட்டு பின்னர் இந்நிர் மனுவை தாக்கல் செய்துள்ளார். உண்மையில் மனுதாரர் வெளியூர் சென்றிருந்தால் எந்த ஊருக்கு சென்றார் என்பதையும், என்ன தேவைக்காக சென்றார் என்பதையும் கூறியிருப்பாா. மனுதாரர் வேண்டுமென்றே எதிருரை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு பொய்யான காரணம் கூறி தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. <u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் வாதிகள். 04.03.2024 ம் தேதி இ.ம.எண்.02/2024 ல் மனுதாரர்கள்/வாதிகளுக்கு

எதிராக பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால், வேலை நிமித்தம் காரணமாக வெளியூருக்கு சிகிச்சைக்கு சென்றிருந்ததால் வழக்கறிஞரை சந்தித்து விபரம் கூற இயலாமல் போய்விட்டது. மேற்படி உத்தரவை ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. இல்லாது போனால் மனுதாரர்களுக்கு ஏராளமான கஷ்ட நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்.

**6.2.** எதிர்மனுதாரர் தன்னுடைய எதிருரையில், மனுதாரர் வழக்கை நடத்தாமல் வீண் காலம் கடத்துவதற்காகவே ஒருதலைபட்சமாக விட்டுவிட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் வெளியூர் சென்றிருந்தால் எந்த ஊருக்கு சென்றார் என்பதையும், என்ன தேவைக்காக சென்றார் என்பதையும் கூறியிருப்பார். எனவே மனுதாரர் பொய்யான காரணம் கூறி தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3.** மனுதாரர் 04.03.2024 ம் தேதி வேலை நிமித்தம் காரணமாக வெளியூர் சென்ற காரணத்தினால் வழக்கறிஞரை சந்தித்து விபரம் கூற முடியாமல் போய்விட்டது என்பது குறித்தும், மேலும் எந்த ஊருக்கு சென்றார் என்பது குறித்தும் மனுவில் குறிப்பிட்டு கூறாததிலிருந்தே மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணம் போதுமானதாக இல்லை என்ற போதிலும் வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டு மனுதாரர்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கி இந்த மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால்

கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06–ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**<u>சாட்சி, சான்றாவணங்கள்</u>**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சிவகாசி
இ.ம.எண்.03/2024
இன்
இ.ம.எண்.02/2024
இன்
அ.வ.எண்.22/2021
உத்தரவு
நாள்–06.02.2026.